என்று இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டு இருக்கிறது. அதைப் பற்றி பரிசீலிப்பதாகவும், முயற்சிப்பதாகவும் மாண்புமிகு 'முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

காமராஜர் மண்டபம், கிண்டி.

*வினா எண் 88—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜ் நினைவாலய மண்டபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நினைவாலய மண்டபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்வி எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்ட மறைந்த தலைவர் காமராஜர் அவர்களுக்கு நம்முடைய உரிய மரியாதையைத் தெரிவிக்கிற முறையில், வருங்காலத்தில் அதிகமான மக்கள் அந்த நினைவாலயத்திற்கு வந்து அஞ்சலி செலுத்துகிற முறையில், அந்த நினைவாலயத்தை இன்னும் அழகுறச் செய்யவும் அங்கே வருகின்ற மக்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்யவும் அரசு முன் வருமா? ஒரு தேசீயத் திருநாளில் கூட அந்த மண்டபம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் கடிதம் வந்து இருக்கிறது. ஆகவே, அந்த மண்டபத்தைப் பராமரிக்க அரசு அதிக கவனம் செலுத்தி, மேலும் பல வசதிகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஆசிரியருக்குக் கடிதம்' பகுதியில் வந்த கடிதம், காந்தி மண்டபத்தைப் பற்றியதாகும். 'காமராஜர் நினைவாலயத்தைப் பற்றி அல்ல.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் நினைவாலய மண்டபம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 26,000 செலவில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் ஆலோசனையையும் அரசு கருத்தில் கொண்டு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஜனவரி 29]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவரவர்களே மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவாலயத்தில் புகைப்படங்கள் வைக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்க்கையிலே நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை ஓவியங்களாகச் சித்தரித்து அங்கே வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கிண்டியிலே இருப்பது காமராஜ் அவர்கள் அங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிற நினைவு மண்டபமாகும். ஆகவே, அந்த இடத்திலே போகும்போது போகிறவர்கள் அதை ஒரு வணக்கத்திற்குரிய இடமாகக் கருதி, வணங்கிவிட்டுச் செல்கிறார்கள். அந்த இடத்திலே எந்த காட்சிப் பொருட்களையும் வைத்து, விழா போல ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்காது. இதே சென்னை மாநகரில் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் திருமலைப்பிள்ளைச் சாலையில் வாழ்ந்துவந்த இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கி, அவர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்களையும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அங்கே காட்சிக்கு வைத்து, அவைகளை தினசரி மக்கள் கண்டு செல்கிறார்கள். அங்கே மேலும் ஏதாவது அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனை சொன்னால் அரசு அதை பரிசீலனை செய்யும்.

திருமங்கலத்திலுள்ள மண் வளப்பாதுகாப்புப் பிரிவு.

*வினா எண் 89 திரு. இரா. முத்தையா, திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது திருமங்கலத்தில் இயங்கிவரும் மண்வளப் பாதுகாப்புத் துறையின் பிரிவு ஒன்றை (உதவி செயற் பொறியாளர் அலுவலகம்) தஞ்சைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திருமங்கலத்திலேயே தொடர்ந்து இயங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) 1-8-80 நாளிட்ட அரசு ஆணையில், திருமங்கலத்தில் உள்ள மண்வளப்பாதுகாப்பு துணைக் கோட்டத்தையும், திருவண்ணாமலையிலுள்ள மண்வளப்பாதுகாப்புத் துணைக் கோட்டத்தையும் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு மாற்றுவதற்கு ஆணையிடப்பட்டது.

(ஆ) திருமங்கலத்திலுள்ள மண்வளப்பாதுகாப்புத் துணைக் கோட்டத்தை தஞ்சைக்கு மாற்றுவதை மறு உத்திரவு பிறப்பிக்கும்வரை நிறுத்திவைக்கும்படி வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.